மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 12 இலட்சம்.

(இ) அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. பணி விரைவில் துவங்கப்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பாற்றில் பாலம் கட்டுவது சம்பந்தமாக திட்டமிட்டு, வேலை நடப்பதாக சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஆண்டு இந்த வேலை துவங்கப்படும். எத்தனை ஆண்டுகளில் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே துவங்கப்படும்; இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும்.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பர பேனர்கள் வைத்துக்கொள்வதற்கான அனுமதி

*குறுகிய கால வினா எண் 3—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை நகரில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பர பேனர் வைத்துக் கொள்ள எந்த முறையில் எத்தனை ஆண்டுகளுக்கு விடப்பட்டுள்ளது?

(ஆ) இதன் மூலம் மாநகராட்சிக்கு ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரம் செய்வதற்கான உரிமை குத்தகை மற்றும் கான்ட்ராக்ட் (ஏலம்) முறையில் அளிக்கப்படுகிறது. இவ்வகையில் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு வரை அளிக்கப்படுகிறது.

(ஆ) ரூபாய் 2,84,840.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பம்பாய் விமான நிலையத்திலிருந்து நகருக்குச் செல்லும் பாதை முழுவதும் நிறைய விளம்பரங்கள்

வைக்கப்பட்டுள்ளன. இதனால் மாநகராட்சிக்கு வருமானம் அதிகம் வருகிறது. அதைப்போல சென்னையிலும் விளம்பரங்கள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பம்பாயில் விமான நிலையத்திலிருந்து நகர் பகுதிக்குச் செல்லும் தூரம் வரையில் விளம்பரப் பலகைகள் வைத்திருப் பதைப் போல, சென்னையிலும் செய்வது மாநகராட்சியின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சென்னையில் மாநகராட்சி விளம்பரப் பலகைகளை நடை பாதை ஓரமாக வைத்திருப்பது, போக்குவரத்திற்கு இடைஞ்ச லாக இருக்கிறது. மேலும் விளம்பரப் பலகைகள் மிக உயரமாக இருப்பதால், பெருங் காற்று அடிக்கும் போது கீழே விழுந்து மக்களுக்கு சேதத்தை விளைவிப்பதால், விளம்பரப் பலகைகளின் உயரத்தைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் தான் விளம்பரம் செய்ய வேண்டுமென்று விதிமுறைகள் இருக் கின்றன. எங்கெங்கே இடைஞ்சலாக இருக்கிறதோ, அவை அகற்றப்படும். பெரிய காற்று அடிக்கும்போது விளம்பரப் பலகைகள் விழுந்து விடுவதாகச் சொன்னார்கள். பெரிய கட்டி டங்கள் கூட சில சமயம் காற்றில் விழுந்து விடுகிறது. அதற்காக நாம் என்ன செய்ய முடியும்.

திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாட்டின் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் போன்றவர்கள் வருகை தருகிறபோதும் விழாக்களிலே சிறப்புச் செய்யும் பொழுது அலங்கார வண்டிகளை அமைக்கிறார்கள். அவற்றை மாநகராட் சியே கட்டணத்தைப் பெற்று ஏற்பாடுசெய்து கொடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இதனால் சாலைகள் பாதிக்கப்படாமலும் இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்கார வளைவுகளை முக்கியமான சாலைகளில் அமைத்து அதன் மூலமாக சாலைகள் பாதிக்கப் படாமல் இருக்கும் திட்டத்தை மாநகராட்சி கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, எவ்வளவு சீக்கிரமாக அதிலே நட வடிக்கை எடுத்து, கொண்டு வர முடியுமோ அந்த அளவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட விளம்பரம் செய்வதற்கான பேனர்களுக்கு அனுமதி பெற்றுக் கொண்டு, அனுமதி பெறாத இடங்களில், அனுமதி பெறாத பேனர்களை வைத்து விளம்பரப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அதைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படி தகவல் இல்லை. ஆனாலும் கூட அங்கீகாரம் பெறாத விளம்பரங்களை யாராவது செய்திருந்தால், அவை அகற்ற படுவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

சென்னை அரசாங்க தோட்டத்திலுள்ள அரசுக் கட்டிடங்கள்

*வினா எண் 158.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை அரசாங்கத் தோட்டத்திலுள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மிக பழுதடைந்திருப்பது பற்றி அரசுக்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (அ) அரசாங்கத் தோட்டத்திலுள்ள கட்டிடங்கள் பற்றி பொதுவான அறிக்கை ஏதும் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் அரசுக்கு அனுப்பப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் தோட்டத்தில் இருக்கிற கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. குறிப்பாக அவைகள் கடந்த 10 வருட காலமாக வெள்ளையடிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. கேட்டால் பணம் இல்லை என்று காரணம் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு பிளாக்கிலும் 50 க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இருக்கின்றன. அவைகளில் அதிகாரி களும் அரசியல்வாதிகளும் தங்கியிருக்கிறார்கள், சில கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து மிகவும் ஒழுகுகிற நிலையிலே இருக்கின்றன. அவர்களைக் கேட்டால் 500

TRUTH ALONE TRIUMPHS